**The Souvenir Published at the time of Nadar Swami Centinery Celebrarion**
**Edited by Sangendhi Dr. S.Muthu Batter & Dr. S.Sudarshan Bhatter -2009**

# ஏகஸப்ததி பக்தனஜா:


நெ.ஸ்ரீ.பார்த்தஸாரதி பட்டாச்சாரியார்
ஸ்ரீவைகானஸம் மாதபத்திரிகை ஆசிரியர்,சின்னமுறை அர்ச்சகம் மிராஸ்தார்
திருவல்க்கேணி


நமது ஸ்ரீவைகானஸபகவத்சாஸ்த்ரத்தில் ப்ருகுமஹரிஷி அருளிய வாஸாதிகாரத்தில் 71 பாகவதோத்தமாள் பற்றிய விவரம் அளிக்கப்பட்டுள்ளது. அஃது பின்வருமாறு-ப்ரஹ்லாதன், நாரதர், புண்டரீகர், பராசரர், வ்யாஸர், சௌநகர், சுகப்ரஹ்மம், வஸிஷ்டர். ஹரிச்சந்த்ரன், மார்கக்ண்டேயர், ஈசானன்(சிவன்), ஹனுமான், பார்வதீ, நந்தீ, ஸுக்ரீவன், அங்கதன், ஜடாயு, ஜாம்பவான், ருக்மாங்கதன், பீஷ்மர், த்ரிஜடா, விபீஷணன், தர்மராஜன், பீமன், அர்ஜுனன், நகுலன், ஸஹதேவன், த்ரௌபதீ, குந்திதேவி, வால்மீகி, ஸநாதனர், ஸநந்தனர், ஸநத்குமாரர், ஸநகர், ஸ்ரீவிகநஸமாமுனிவர், மரீசி, கச்யபர், ப்ருகு, அத்ரி, ஸூர்யன், ப்ருஹஸ்பதி, சந்த்ரன், சுக்ராச்சாரியர், சனி, திலீபன், தசரதன், ரகு(ராமருடைய முன்னோர்), வஸுதேவர், நந்தகோபர், யசோதா, தேவகீ, விதுரர், அனந்தன்(ஆதிசேஷன்), கருடன், விஷ்வக்ஸேனர், விநாயகர், துர்கா, ஷண்முகன், ஜநகர், போஜன், விச்வாமித்ரர், குஹன்(ராமரை ஸந்தித்த வேடர் தலைவன்), பாஞ்சஜன்யம்(சங்கு), ஸுதர்சனம்(சக்ரம்), கௌமோதகீ(கதை), ஸார்ங்கம்(வில்), நந்தகம்(கத்தி), மஹாப, கார்த்தவீர்யார்ஜுனன், ஜமதக்நிமுனிவர் ஆகிய 71 பாகவதாள் ஸ்ரீபெருமாள் ஸன்னிதியில் பக்தபிம்பமாக ப்ரதிஷ்டை செய்யும் அளவுக்கு தகுதியும் பகவத்ப்ரீதியும் அடைந்தவர்களாகச் சொல்லப்படுகின்றனர்.

ஹரிஸ்மரணமஹிமா - ஸ்ரீவைகானஸபகவத்சாஸ்த்ரத்தில் கிலாதிகாரத்தில் ஸ்ரீ ப்ருகுமஹரிஷி ஸாதித்தருளியது: - வேதம், ஸ்ம்ருதிகளில் சொல்லப்பட்ட கர்மா தவிர்க்கமுடியாத காரணத்தினால் செய்யப்படவில்லையெனில் அதற்கு ஹரிஸ்மரணமே ப்ராயச்சித்தம். கர்மகாண்டத்தில் சொல்லப்பட்டபடி மஹாயஜ்ஞங்கள் செய்யும்போது ப்ரமாணத்திருந்து விலகிச் செயல்பட்டால் அந்த தோஷம் நீங்கவும் அந்த மஹாயாகம் ஸம்பூர்ணமாகவும் விஷ்ணுவை ஸ்மரித்தல் அவசியம். தீய பாபங்களைச் செய்தவன் தன் பாபங்களைப் போக்கவேண்டுமென்றால் ஸதா பகவானை ஸ்மரித்தவாறே ஸ்னானம் முதய அனைத்து நித்ய கர்மாவையும் செய்யவேண்டும். இவ்வாறு மஹாபாபிகளே நித்யம் மூன்றுகாலமும், ஸந்த்யைகளிலும் பகவானை ஸ்மரித்து நற்கதியடையும் போது, ச்ரத்தை, பக்தியுடன் ஹரியை ஸ்மரித்தவாறு மஹாயாகங்களைச் செய்பவர்களின் நற்பயன்களைச் சொல்லவும் கூடுமோ? அவர்கள் க்ருதக்ருத்யராய் தன் வாழ்நாளில் ஒருவர் செய்யவேண்டியவற்றைச் செய்தவராய் ஆவர்.

(ஸர்வேபி வைதிகாசாராஸ் ஸர்வே யஜ்ஞதபாம்ஸி ச விஷ்ணுபூஜா விதேர் பேதாஸ் தத்கர்மபலதோ ஹரி:) அனைத்து விதமான வேதவழியான ஆசாரங்களும் மஹாயாகங்களும் தவங்களும் ஸ்ரீவிஷ்ணுவின் திருவாராதனத்தின் பலவித வடிவங்களேயாகும். அந்தந்த பக்தர்களின் இஷ்டங்களை அந்தந்த தைவங்களின் பெயரால் அந்தந்த கர்மாவின் பலன்களை அளிப்பவன் ஹரியே. இவ்விடத்தில் ஸ்ரீப்ருகுமஹரிஷி அர்ச்சகருடைய லக்ஷணத்தை வெகு அழகாக ஸாதிக்கிறார்:

**The Souvenir Published at the time of Nadar Swami Centinery Celebrarion Edited by Sangendhi Dr. S.Muthu Batter & Dr. S.Sudarshan Bhatter -2009**

மிதபோஜீ ஜிதக்ரோத: ருஜுராசாரஸம்யுத:
மந்த்ரகல்பவிசேஷஜ்ஞோ பக்திமான் நியதேந்த்ரிய:
சுத்தாத்மா ஸத்யஸந்தஸ்ச ஸ்நாநசீலஸ்ச யோகவித்
ஏவங்குணஸமாயுக்த: பூஜகஸ்ஸஸ்யதே புதை:
ஸுகம் ஸ நிவஸேத் வித்வான் தேவாலயஸமீபத:

- அளவாகச் சாப்பிட்டு, கோபத்தை ஜெயித்தவராய், கோபமே வராதவராய், திடமான தேகத்துடன் தூய ஆசாரத்தை உடையவராய், பெருமாளுடைய திருவாராதனம், திருமஞ்ஜனம், உத்ஸவம், மஹாப்ரதிஷ்டை முதய வைபவங்களில் தான் சொல்லும் மந்த்ரங்கள், அதன் அர்த்தங்கள் அனைத்தும் விசேஷமாக அறிந்தவராய், ஸ்ரீஹரிசரணங்களில் பக்தியுள்ளவராய், கண், கை, காது, கால், வாய், மூக்கு முதய அனைத்து இந்த்ரியங்களையும் தன் கட்டுப்பாட்டில் வைத்திருப்பவராய், பிறருக்குத் தீங்கு செய்யாத நல்ல மனதையுடையவராய், ஸத்யம் தவறாதவராய், ஸ்னானம் முதய நல்லொழுக்கமுடையவராய், யோகசாஸ்த்ரம் அறிந்தவராய் உள்ள அர்ச்சகர் வித்வான்களால் கொண்டாடப்படுவார். இப்பேற்பட்ட அர்ச்சகஸ்வாமி ஆலயத்திற்கு ஸமீபத்தில் வெகுஅருகில் உள்ள அகத்தில் நிம்மதியாக ஆனந்தமாகக் குடியிருக்கவேண்டும். (இதற்கான வழிவகைகளை அந்தந்த தேவஸ்தானம் செய்து, இத்தகையவரை ரக்ஷிக்கவேண்டும் என்று பொருளாகும்.)

இப்பேற்பட்ட கல்யாணகுணங்கள் பல பொருந்திய நடார் ஸ்ரீ.உ.வே. ஸ்ரீநிவாஸபட்டாச்சார்யஸ்வாமியின் சதாப்திமஹோத்ஸவம் விசேஷமாகக் கொண்டாடப்படுவது சாலச்சிறப்பு வாய்ந்த பாராட்டத்தகுந்ததாகும். இந்த மஹோத்ஸவத்தில் கலந்துகொள்ளும் பாக்யம்பெற்றோரில் அடியேனும் இருக்க விழைகிறேன். பகவத்ஸங்கல்பப்படி யாவும் நடக்கும். அந்தப்படியாக நல்லோர் பலரும் இணைந்து செய்யும் இந்த திவ்யசதாப்திமஹோத்ஸவம் சிறப்பாக நடைபெற்று, நமது ஸமூஹம் நமது சாஸ்த்ரஜ்ஞானத்திலும் கல்விகேள்விகளிலும் சிறந்துவிளங்க தன் வாழ்நாளை நிரம்பச் செலவழித்த நடார்ஸ்வாமியின் பல குறிக்கோள்கள் நிறைவேறி ஸ்ரீவைகானஸாள் இன்னம் எட்டஇயலாத உயரமெலாம் சென்று நிலைத்துநிற்கும் தன்மையுடன் பகவத்கைங்கர்யங்களைச் சிறப்பாக நடத்திக்கொண்டிருக்க வேண்டுகிறோம்.

எதிர்காலத்திலும் இவ்வாறு பகவத் பாகவத அர்ச்சக கைங்கர்யங்களை சிறப்பாக பகவான் ஸ்ரீவைகானஸகுலஸ்வாமிகளைக் கொண்டு தொடர்ந்து நடத்திக்கொள்ள நமக்கெல்லாம் உறுதுணையாக விளங்கும்படியாக ஸ்ரீதிருவின்மணாளனையும், தன் நிகரில்லா ஒப்பிலா அப்பனான விண்ணகரப்பனை பரமபதத்தில் ஆராதிக்கும் பாக்யம் பெற்ற ஸ்ரீவிகநஸமாமுனிவரையும் உடன் ஆராதிக்கும் ஸ்ரீஸ்ரீநிவாஸ தீக்ஷிதேந்த்ரர், பட்டபாஸ்கரர், ந்ருஸிம்ஹவாஜபேயி, நடார் ஸ்ரீ.உ.வே. ஸ்ரீ நிவாஸ பட்டாச்சார்யர்ஸ்வாமி முதய மஹநீயர்களையும் இப்பூவுலகில் வைகானஸ திவ்யக்ஷேத்ரங்களில் ஆராதிக்கும் வைகானஸகுலஸ்வாமிகளையும் ஸேவித்து நிறைவுசெய்கிறேன்.

*************